

புதுச்சேரிக்கு வருகை புரிந்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கே.ஆர்.ஸ்ரீராமை முதல்வர் ரங்கசாமி மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினார். அருகில் சட்டப்பேரவை தலைவர் செல்வம், அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், எம்எல்ஏ கல்யாணசுந்தரம், தலைமைச் செயலாளர் சரத் சவுகான், அரசு செயலர் கேசவன், புதுச்சேரி தலைமை நீதிபதி சந்திரசேகரன், சட்ட செயலர் சத்தியமூர்த்தி ஆகியோர் உள்ளனர்.

### கடலூரில் வருகிற 25-ந் தேதி

# உங்களைத்தேடி உங்கள் ஊரில் என்ற சிறப்பு திட்டத்தின் கீழ் புவனகிரி பகுதியில் நடைபெறும் பணிகள்

### கலெக்டர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார் ஆய்வு செய்கிறார்

கடலூர் அக-21.

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் 25.10.2024 அன்று "உங்களைத் தேடி உங்கள் ஊரில் " என்ற சிறப்பு திட்டத்தின் கீழ் கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார், அரசின் அனைத்து நலத்திட்டங்கள், சேவைகள், மக்களின் தேவைகள் குறித்து கள ஆய்வு மற்றும் அரசு அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மக்களை நாடி, மக்கள் குறைகளை கேட்டு,உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டத்தினை அறிவித்துள்ளார். இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும், ஒவ்வொரு மாதமும், மூன்றாம் புதன்கிழமை அன்று ஒரு நாள் வட்ட அளவில் தங்கி, களஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளை கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி மக்களை சென்றடைவதை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கடலூர் மாவட்டத்தில் புவனகிரி வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் 25.10.2024 அன்று கள ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது. மேலும் அன்று மாலை 4 மணி முதல் 5 மணி வரை புவனகிரி ம வட்டாட்சியர்அலுவலகத்தில் மனுக்கள் பெறப்படவுள்ளது.

உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ் புவனகிரி வட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள், பல்வேறு அரசு அலுவலகங்கள் மூலம் பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள், செயல்பாடுகள், திட்டங்கள் செயல்படுத்துவது தொடர்பாகவும், பொதுமக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பாகவும், கலெக்டர் ஆய்வு மேற்கொள்ள உள்ளார்.

மேலும், அனைத்து துறை மாவட்ட அளவிலான அலுவலர்கள் களஆய்வு மேற்கொண்டு இக்கள ஆய்வுப்பணிகள் தொடர்பாக மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

மேலும், முதலமைச்சரின் சிறப்புத் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அரசு மருத்துவமனைகள், இ-சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நியாயவிலைக் கடைகள், வட்டார வளர்ச்சி அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் ஆய்வாளர்கள் அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகங்கள், கிராம ஊராட்சி அலுவலகம், சமூக பாதுகாப்புத் திட்டங்கள் தொடர்பாகவும் பொதுமக்களுக்கு வழங்கப்படும்

போக்குவரத்து சேவைகள், பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், அரசு விடுதிகள் ஆய்வு, திடக்கழிவு மற்றும் சுகாதார மேலாண்மைகள் உள்ளிட்ட பல்வேறு அரசின் திட்டங்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டங்கள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆய்வும், பொதுமக்களின் சேவைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக தமிழக அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப் படும். "உங்களைத்தேடி உங்கள் ஊரில்" என்பது 'பல்வேறு சேவைகள் வழங்குவதை மேம்படுத்துவதாகும்; அரசின் பல்வேறு திட்டங்களின் பணிகளை விரைவுபடுத்துவதற்கான திட்டமாகும்" என கடலூர் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

# செயிண்ட் மதர் தெரசா பவுண்டேஷன் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் ஆலோசனைக்கூட்டம்

குறிஞ்சிப்பாடி, அக்.21-

குறிஞ்சிப் பாடியில் செயிண்ட் மதர் தெரசா பவுண்டேஷன் தொண்டு நிறுவனம் சார்பில் ஆலோசனைக் கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு நிறுவன தலைவர் சுவைக்கின் தலைமை தாங்கி பேசியதாவது.

இத்தொண்டு நிறுவனம் குறிஞ்சிப்பாடியை தலைமையிடமாகக் கொண்டு கோயம்புத்தூர் திருப்பூர் நீலகிரி ஊட்டி திருச்சி விழுப்புரம் மற்றும் கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஏழை எளியோர் கணவனால் கைவிட்ட மகளிர்கள் ஆதரவற்ற மாற்றுத்திறனாளிகள் முதியோர்கள் பள்ளி மாணவர்களுக்கான படிப்பு சம்பந்தமான உதவிகள் உள்ளிட்டவைகளை நிறுவனத்தின் மூலம் பராமரித்து வெகு சிறப்பாக சமூக சேவையை செயிண்ட் மதர் தெரசா பவுண்டேஷன் தொண்டு நிறுவனம் செய்து வருகின்றதாக தெரிவித்தார். நிர்வாக அலுவலர் ஜெனித்தா ராணி அனைவரையும் வரவேற்று பேசினார்.

குறிஞ்சிப்பாடி கனரா வங்கி அலுவலர் விக்னேஷ் கலந்துகொண்டு சுய உதவிக் குழு பெண்களுக்கு குழுவின் மூலம் கிடைக்கும் தொழில் கடன் சிறு தொழில் கடன் சேமிப்பு தனிநபர் கடன் உள்ளிட்ட பெண்கள் வளர்ச்சிக்கு உண்டான பயன்களைப் பற்றி எடுத்துரைத்தார். கடலூர் புதுவாழ்வு குடி போதை ஒழிப்பு மைய நிறுவனத்தின் செயலாளர் கோடீஸ்வரன் ஆலோசனைகளை வழங்கினார்.ட்ரா தொண்டு நிறுவன தலைவர் ஜான் விக்டர் சுய உதவி குழு செயல்பாடுகள் மற்றும் சிறு தொழில்களை இணைந்து நடத்துவது பற்றி எடுத்துக் கூறினார். கூட்டத்தில் நிறுவனத்தின் 19-வது ஆண்டு விழாவை நடைபெறுவதையொட்டி கலந்து ஆலோசிக்கப்பட்டது.

விழாவில் ஆதரவற்ற நலிந்தோர் மகளிர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பித்தனர். கூட்டத்தில் நிர்வாக மேற்பார்வையாளர் அம்பிகா உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகளும் 150 க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவி குழு பெண்களும் கலந்து கொண்டனர் நிகழ்ச்சி முடிவில் கீதா கிரேஸி நன்றியுரையாற்றினார்.

# அரக்கோணத்தில் ரோட்டரி, சிம்ஸ் இணைந்து சிறப்பு மருத்துவ முகாம்

அரக்கோணம் அக்.21

அரக்கோணத்தில் வட சென்னை சிம்ஸ் மருத்துவமனையுடன் ரோட்டரி பொன்விழா ஆண்டு முன்னிட்டு பிரமாண்ட மருத்துவ முகாம் சி.எஸ்.ஐ. சென்ட்ரல் மேல் நிலைப் பள்ளியில் தொடக்க விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு ரோட்டரி சங்க தலைவர் ஆர்பி. ராஜா தலைமை தாங்கினார் கண் முகாம் ஒருங்கிணைப்பாளரும் மகாலட்சுமி



டெக்ஸ்டைல் ஸ் நிறுவனருமான பி.இளங்கோ ஜி. மணி மனோகர்பிரபு லட்சுமிபதி ஜெ. மணிகண்டன் செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரோட்டரி சங்க போலியோ பளஸ் சேர்மன் ஆர். வெங்கட்டரமணன் வரவேற்றார் சிறப்பு அழைப்பாளர்களாக சிம்ஸ் மருத்துவமனை துணை தலைவர் ராஜி சிவசாமி மற்றும் ஐஎன்எஸ் ராஜாளி கடற்படை டெபிடி கமாண்டர் திருமலை கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்தனர்.முகாமில் இருதய நோய் எலும்பு நோய் மருத்துவம் காது. மூக்கு, தொண்டை பாதிப்பு பொது மருத்துவம் கல்லீரல் சம்மந்தமானவை மகளிர் மருத்துவம் குழந்தைகள் நல மருத்துவம் மற்றும் பல் மருத்துவங்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும் மற்றும் சிகச்சைகளும் வழங்கபட்டன பொது மக்கள் 350 பேர் கலந்து கொண்டு பயனடைந்தனர் ரவிக்குமார் முரளி மோகன் பார்மிஸ்ட் ஹரி ஆகியோர் முகாம் பணிகளில் ஈடுபட்டனர்

இறுதியில் மருத்துவ சேவை இயக்குனர் கேபிகே பிரபாகரன் நன்றி கூறினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# செஞ்சியில் இலவச கண் சிகிச்சை முகாம்: செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்

### 300க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்றனர்



செஞ்சி அக-21.

விழுப்புரம் மாவட்டம் தட்சசீலாபல்கலைக்கழகம் மற்றும் புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை சார்பில் செஞ்சிகாந்தி பஜார் ஊராட்சி ஒன்றியநடுநிலைப் பள்ளியில் மாபெரும் இலவச கண் சிகிச்சை பரிசோதனை முகாம் நடைபெற்றது.

இலவச கண் பரிசோதனை சிறப்பு முகாமினை செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு தொடங்கி வைத்தார்.

முகாமில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய செயலாளர்கள் மேல்மலையனூர் நெடுஞ்செழியன், மயிலம் மணிமாறன், திண்டிவனம் நகர செயலாளர் கண்ணன்,நகர பொருளாளர் நெடுஞ்செழியன்,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் பொன்னம்பலம் சங்கீதா சுந்தரமூர்த்தி,தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

முகாமில்புதுச்சேரி மணக்குள விநாயகர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண் மருத்துவர் டாக்டர் ஸ்ரீ பால் தலைமையிலான மருத்துவர்கள் கலந்துகொண்டு கிட்டப் பார்வை, தூரப் பார்வை, கண்ணீர் அழுத்தம் கண்ணில் புரை,ஆகியவற்றை பரிசோதனை செய்துசிகிச்சை அளித்தனர்.

முகாமில் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### புதுச்சேரி என்.ஆர்.காங்கிரஸ் -பாஜக ஆட்சியாளர்கள் மீது 6 புகார்கள்:

# ஜனாதிபதியிடம் புகார் அளிக்க காங்கிரஸ் திட்டம்: முன்னாள் முதல்வர் நாராயணசாமி பரபரப்பு குற்றச்சாட்டு

புதுச்சேரி அக் 21

புதுச்சேரி முன்னாள் முதல்வர் நாராயணசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது இந்தியா வளர்ந்து வரும் நாடு என சொல்லிவிட்டு 80 கோடி மக்களுக்கு தலா 5 கிலோ இலவச அரிசி திட்டத்தை நிறைவேற்றுகிறார்கள் நாடு வளர்ந்து வரும் என்றால் 80 கோடி பேருக்கு இலவச அரிசி தருவதற்கு மோடி இன்னும் ஐந்து ஆண்டுகள் நீடித்துள்ளார் பட்டினியால் வாடும் நாடுகள் 112 இல் இந்தியா 105 இல் உள்ளது இதற்கான ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது இந்தியாவில் 27.3% பேர் ஏழைகள் காங்கிரஸ் ஆட்சியில் 19 சதவீதமாக இருந்த சதவீதம் உயர்ந்துள்ளது

இது பொருளாதார வீக்கம் தமிழக ஆளுநர் கலந்து கொண்ட விழாவில் திராவிட வாழ்க்கை நீக்கப்பட்டு ஒளிபரப்பானது இது கொடுமை ஆளுநர் ரவி சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை முன் வைத்து தமிழர்களை அவமதித்து தமிழக அரசுக்கு தினமும் தொல்லை தருகிறார் ஆளுநர் ரவியை மத்திய அரசு திரும்ப பெற முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்துகிறார் மத்திய அரசுக்கு கைப்பாவையாக இருந்து பிரதமருக்கு சேவகம் Importance தவிர தமிழக வளர்ச்சிக்கு, மக்கள் உணர்வுக்கு மதிப்பளிக்கவில்லை பாராபட்சமாக செயல்படுவது கண்டிக்கத்தக்கது அதனால் ஆளுநர் ரவியை திரும்ப பெற வேண்டும் புதுச்சேரி அரசு அறிவிப்பு அரசாக தான் தான் உள்ளது அறிவித்த திட்டங்களை செயல்படுத்தவில்லை பொதுப்பணித்துறை வவுச்சர் ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு 10 ஆண்டு பணிபுரிந்தோர் பணி நிரந்தரம் உட்பட ஏதும் நிறைவேற்றாமல் அறிவிப்பாக உள்ளது கோவில் நிலங்கள் தொடர்ந்து கபலிகரம் செய்யப்படுகிறது காரைக்காலில் கோவில் விவகாரத்தில் முக்கியமாக குற்றம் சாட்டப்பட்டவர் வெளியில் தான் இருக்கிறார்.

கோவில் நிலத்தை பட்டா மாற்றி விற்பது சகஜமாகிவிட்டது கடும் நடவடிக்கை தேவை காமாட்சி அம்மன் கோவில் சொத்து அபகரி தோல் மீது மேற்கட்ட விசாரணை நடக்கவில்லை எதைப் பற்றியும் முதல்வரும் அமைச்சர்களும் கவலைப்படவில்லை இவர்களை வீட்டுக்கு அனுப்பும் காலம் வெகு தூரத்தில் இல்லை புதுச்சேரி என் ஆர் காங்கிரஸ் பாஜக ஆட்சியாளர்கள் மீது ஆதாரங்களுடன் ஆறு புகழ்களை குடியரசுத் தலைவர் சந்தித்து காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் தலைமையில் தருவோம் சிபிஐக்கு புகாரை நேரடியாக அனுப்ப இயலாது ரேஷன் கடை திறப்பதாக அறிவித்துள்ளது மகிழ்ச்சி இது மக்கள் கோரிக்கை தொடர்ந்து செய்ய வேண்டும் அறிவித்தபடி கோதுமை சமையல் என்னை பருப்பு ஆகியவற்றை தர வேண்டும் வில்லியனூர் கொம்மியூன் பஞ்சாயத்தில் கம்ப்யூட்டர் ஆபரேட்டராக ரவிக்குமார் பணிபுரிந்து வருகிறார் அவரது வீட்டை சென்னை சிபிஐ சோதனையிட்டது அதன்படி தற்போது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளது வில்லியனூர் பஞ்சாயத்து கம்ப்யூட்டர் ஆபரேட்டாக பணிபுரிந்து வந்த ரவிக்குமார் அவரது மனைவி பிரியதர்ஷினி அவரது மாமியார் குமுதம் பெயரிலும் சொத்துக்கள் வாங்கப்பட்டுள்ளன இவர்கள் 3 பேர் மீதும் சிபிஐ குற்றம் சாட்டியுள்ளது சிபிஐ தகவல் அறிக்கையில் அவர் வாங்கிய சொத்துக்கள் ஆறு பக்கங்களில் பட்டியலிட்டுள்ளது

இந்த மொத்த சொத்தின் மதிப்பு ரூபாய் 106 கோடி இதில் பல வீடுகள் சொத்துக்கள் ஆகியவை அடங்கும் நாடாளுமன்ற தேர்தல் சமயத்தில் இரு முறை அதிகாரிகள் பணம் பதுக்கி வைத்துள்ளதாக சோதனை செய்தனர் அப்பொழுது பாஜக வேட்பாளர் நமச்சிவாயம் இரண்டாவது சோதனை நடக்கும் போது வாக்குவாதம் செய்தார் தொழிலதிபரின் பினாமியாக உள்ளார்.

இது சிபிஐ கண்டுபிடித்த சொத்து தான் கண்டறியாக பல கோடி சொத்துக்கள் உள்ளன இவருக்கு இவ்வளவு சொத்து எங்கிருந்து வந்தது கம்ப்யூட்டர் ஆபரேட்டர் சம்பளம் என்ன இவ்வளவு சொத்து வாங்க நிதி ஆதாரம் எப்படி கிடைத்தது யார் பின்னணி யார் பினாமியாக உள்ளார் என்பதை சிபிஐ தீவிரமாக விசாரிக்க வேண்டும் குறிப்பாக இவரை சிபிஐ வழக்கில் இருந்து காப்பாற்ற ஒரு அமைச்சர் சென்னையில் தங்கியுள்ளார் சிபிஐ ஆதாரம் சேகரிக்காமல் வழுக்கு தாக்கல் செய்ய மாட்டார்கள் இவர் சொத்துக்களை வாங்க கடந்த 2009 இல் இருந்து வாங்கியுள்ளார் சுமார் 60 ஆயிரம் வரை சம்பளம் வாங்கிவிட்டு ரூபாய் 106 கோடிக்கு சொத்தை வருமானத்துக்கு அதிகமாக வாங்கியுள்ளார் இந்த கோடிக்கணக்கான சொத்து யாருடைய பணம் என்பதை விசாரிக்க வேண்டும் அவரது டைரியில் யார் யாருக்கு பணம் தந்ததாக குறிப்பிட்டு வைத்துள்ளார்

சிபிஐ இந்த வழக்கை முறையாக விசாரிக்க வேண்டும் சிபிஐ ஆதாரத்துடன் சொல்கிறேன் தமிழகப் பகுதியிலும் இவர் சொத்து வாங்கியுள்ளதாக தெரிகிறது இதில் சம்பந்தப்பட்ட அனைவர் மீதும் வழுக்கு தாக்கல் செய்து பாராபட்சம் இன்றி சிபிஐ செயல்பட வேண்டும் அரசியல் அழுத்தத்திற்கு சிபிஐ பலிகளாக விடக்கூடாது நடுநிலையுடன் செயல்பட வேண்டும் அழுத்தத்திற்கு இடம் கொடுக்கக் கூடாது சம்பந்தப்பட்டவர் மீது கைது செய்ய வேண்டும் வழக்கு பதிவு செய்தும் அரசு ஊழிய ரவிக்குமார் மீது எந்தவித நடவடிக்கையும் புதுச்சேரி அரசு செய்யவில்லை பணியாளர் துறையின் தலைவரான முதல்வர் ரங்கசாமி மௌனம் காக்கிறார் இவரைக் காப்பாற்ற நினைக்கிறாரா ஊழல் குற்றச்சாட்டு வழக்கு பதிவு செய்தால் அவர் பணியிடை நீக்கம் செய்ய வேண்டும் விசாரணை செய்ய வேண்டும் புதுச்சேரி அரசு பணியாளர் துறை முதல்வர் ரங்கசாமி இவரை பாதுகாக்க நினைக்கிறாரா என்று விளக்கம் தர வேண்டும் சிபிஐ ஏன் இன்னும் கைது செய்யவில்லை என விளக்கம் தர வேண்டும் இவ்வாறு அவர் கூறினார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



புதுச்சேரி முத்தியால்பேட்டை தொகுதி சோலை நகர் முத்துமாரியம்மன் ஆலய திருப்பணிக்கு ஆலய நிர்வாகிகளிடம் திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் மு.பிரபாகரன் முதல் தவணையாக ரூ.50,000 சொந்த நிதியிலிருந்து நிதி உதவி வழங்கினார். அருகில் திமுக பிரமுகர்கள் செல்வம், லோகையன் உள்ளனர்.

### கடலூர் மாவட்டத்தில்

# விவசாய நிலம் வாங்குவதற்கு தாட்கோ மானியத்துடன் கிரையத்தொகை

### கலெக்டர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார் தகவல்

கடலூர் அக-21.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) நன்னிலம் மகளிர் நில உடமை திட்டத்தின் கீழ் விவசாய தொழிலாளர்களை ஊக்குவித்திடும் வகையில் விவசாய நிலம் வாங்குவதற்கு தாட்கோ மானியத்துடன் கிரையத் தொகையினை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலமாக குறைந்த வட்டியில் கடனாக பெற்று வழங்கப்படுகிறது.

நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய தொழிலாளர்கள் சமூக பொருளாதார நிலையில் மேம்பாடு அடையும் பொருட்டு விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பீட்டின்படி திட்டத் தொகையில் 50% அல்லது அதிகப்பட்சம் ரூ.5 லட்சம் வரை மானியம் விடுவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100 சதவீதம் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்களிக்கப்படுகிறது.

தற்போது பயனாளிகள் பங்குத்தொகை இல்லாமல் மானியத்தொகை போக எஞ்சிய கிரையத் தொகையினை தேசிய பட்டியலினத்தோர் நிதி மேம்பாட்டுக் கழக நிதியிலியிருந்து பயனாளிகளுக்கு 6 % மிக குறைந்த வட்டியில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனாக பெற்று நிலம் வாங்குவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சார்ந்தவர்கள் தாட்கோ இணையதள (www.tahdco.com) முகவரியில் விண்ணப்பம் செய்ய வேண்டும். மேலும், விபரங்களுக்கு தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகத்தை அணுகி விவரம் பெற்று உரிய ஆவணங்களுடன் பதிவேற்றம் செய்யலாம் என கலெக்டர் , சி.பி.ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்துள்ளார்.

### திருவண்ணாமலையில்

# எம்ஜிஆர்,ஜெயலலிதா உருவ சிலைகள் அமைக்க அதிமுக செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்



திருவண்ணாமலை, அக்.21:

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி ஆணைக்கிணங்க திருவண்ணாமலையில் ஒரு தனியார் திருமண மகாலில் தி.மலை நகர அதிமுக சார்பில் செயல்வீரர்கள் வீராங்கனைகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு நகர செயலாளர் ஜெ.எஸ். (எ) ஜெ. செல்வம் தலைமை தாங்கினார்.

இதில் சிறப்பு அழைப்பாளர்களாக திருவண்ணாமலை கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.இராமச்சந்திரன் அதிமுக மாநில இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் வி.பி.பி. பரமசிவம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இந்த கூட்டத்தில் திருவண்ணாமலை முன்னாள் நகர மன்ற தலைவர்கள் வி.பவன்குமார் என்.பாலசந்தர் முன்னாள் நகர செயலாளர் வி.கனகராஜ் ஆகியோரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து திருவண்ணாமலையில் முன்னாள் முதலமைச்சர்கள் எம்ஜிஆர் ,ஜெயலலிதா ஆகியோரின் திருவுருவ சிலையை நிறுவப்பட்டு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி கே.பழனிச்சாமி திறந்து வைப்பதென்றும் அதிமுக சாதனைளையும் எம்ஜிஆர் ஜெயலலிதா எடப்பாடி கே.பழனிச்சாமி ஆகியோரின் சாதனைகளையும் பொதுமக்களிடத்தில் எடுத்துச்செல்லவும் தமிழ்நாடு மக்களை வஞ்சிக்கும் திமுக அரசை கண்டித்து தெருமுனை பிரச்சாரம் செய்வதென்பன உள்ளிட்ட 5 தீர்மானங்கள் கூட்டத்தில நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்ட தலைவர் கண்ணன் மாவட்ட பொருளாளர் கராத்தே சுரேஷ்குமார் மாவட்ட துணை செயலாளர் ஏ.கே.அரங்கநாதன் மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே.ராஜன் மாவட்ட எம்ஜிஆர் இளைஞரணி செயலாளர் டிஸ்கோ எஸ்.குணசேகரன் மாவட்ட மாணரவணி செயலாளர் சிவக்குமார் நகர எம்ஜிஆர் இளைஞரணி செயலாளர் எஸ்.இளஞ்செழியன் நகர முன்னோடி நிர்வாகி ஞானசௌந்தரி கனகராஜ் நகர தலைவர் பழனி நகர பொருளாளர் ராமமூர்த்தி மற்றும் மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் அணி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள் மாமன்ற உறுப்பினர்கள் கட்சி முன்னோடிகள் உள்பட 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

# தமிழக அரசு உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும்

### யாதவ மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தில் தீர்மானம்



திருவண்ணாமலை, அக்.21:

தமிழக அரசு உடனடியாக சாதிவாரி கணக்கெடுப்பை நடத்திட வேண்டும் என திருவண்ணாமலையில் நடந்த யாதவ மக்கள் இயக்க மாநில மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருவண்ணாமலை வேங்கிக்காலில் ஒரு தனியார் திருமண மஹாலில் யாதவ மக்கள் இயக்க மாநில மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு தலைமை ஒருங்கிணைப்பாளர் மாநில தலைவர் செங்கம் கு.ராஜாராம் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாக மாநில தலைவராக செங்கம் கு.ராஜாராம் மாநில செயலாளராக ஆர்.கிருஷ்ணமூர்த்தி மாநில இளைஞரணி செயலாளராக கே.ஆர்.பிரகாசத் மாநில பொருளாளராக ஏ.எழில்அரசன் மாநில துணை பொதுச் செயலாளராக கே.வீரப்பன் மாநில இளைஞரணி துணை செயலாளராக வி.சேட்டு மாநில மாணவரணி தலைவராக சந்தோஷ்குமார் வர்த்தகரணி மாநில செயலாளராக கே.சரவணன் ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.தமிழகத்தில் ஒடுக்கப்பட்ட நசுக்கப்பட்ட சமூகங்கள் பொருளாதாரத்தில் மேன்மையடைய சாதிவாரி கணக்கெடுப்பை தமிழக அரசு உடனடியாக நடத்திட வேண்டும் கால்நடைவாரியத்தை அமைத்து யாதவ தலைவராக நியமிக்க வேண்டும் திருவண்ணாமலையில் கார் பார்க்கிங் மற்றும் பக்தர்கள் தங்கும் விடுதியை ஏற்படுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட 15 தீர்மானங்கள் ஆலோசனை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் தமிழகம் முழுவதிலுமிருந்து வருகை தந்த மாநில மாவட்ட நிர்வாகிகள் உள்பட 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில் புதிதாய தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அமைப்பு செயலாளராக எஸ்.செந்தில் வேலன் நன்றி கூறினார்.

கண், ரத்த தானம் செய்வீர்

# திருவேற்காட்டில் 2வது நாளாக ஏரியில் ஆக்கிரமிப்பு கட்டிடங்கள் அகற்றும் பணி: பொது மக்கள் சாலை மறியல்

**சென்னை அக் 21-**

திருவேற்காடு கோலடி ஏரியில் நேற்று காலை 2வது நாளாக ஆக்கிரமிப்பு வீடுகளை அகற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதியை சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. திருவேற்காடு நகராட்சிக்கு உட்பட்ட 169 ஏக்கர் பரப்பளவில் கோலடி ஏரி உள்ளது.தற்போது பல்வேறு ஆக்கிரமிப்புகள் காரணமாக, கோலடி ஏரியின் பரப்பளவு 112 ஏக்கராக சுருங்கியுள்ளது. இந்த ஏரியை ஆக்கிரமித்து 100க்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு உள்ளன. கோலடி ஏரியை ஆக்கிரமித்து கட்டப்பட்டு உள்ள வீடுகள் மற்றும் கட்டிடங்களை அகற்றுவதற்கு பூந்தமல்லி வருவாய் துறை அதிகாரிகள் முடிவு செய்தனர். இதைத் தொடர்ந்து, கோலடி ஏரிப்பகுதியில் நேற்று முன்தினம் வருவாய்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். இதில், அங்கு கோலடி ஏரியை ஆக்கிரமித்து புதிதாக 25 கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவது அதிகாரிகளுக்குத் தெரியவந்தது.இந்நிலையில், கோலடி ஏரியை ஆக்கிரமித்து புதிதாக கட்டப்பட்ட 7 கட்டிடங்கள் மற்றும் கட்டுமானப் பணிகள் நடைபெறும் புதிய கட்டிடங்களை நேற்று முன்தினம் மாலை பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வருவாய்துறையினர் இடித்து அகற்றினர். இதனால் அங்கு பரபரப்பு நிலவியது. மேலும், கோலடி ஏரியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள குடியிருப்புகள் கணக்கீடு செய்யப்பட்டு, முறையாக நோட்டீஸ் வழங்கப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என வருவாய்த்துறை அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.இந்நிலையில், கோலடி ஏரியில் ஆக்கிரமித்து கட்டப்பட்டு உள்ள வீடுகள் மற்றும் குடியிருப்புகளை பொக்லைன் இயந்திரம் மூலமாக இடித்து அகற்றும் பணியை நேற்று காலை 2வது நாளாக போலீஸ் பாதுகாப்புடன் வருவாய்த்துறை அதிகாரிகள் துவக்கினர். இதற்கு அப்பகுதியை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மக்கள் எதிர்ப்பு தெரிவித்து, சாலை மறியல் போராட்த்தில் ஈடுபட்டனர். இப்பகுதியில் நீண்ட காலமாக வசிக்கும் மக்களை வெளியேற்றக்கூடாது என்று அதிகாரிகளிடம் எதிர்ப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதையடுத்து அங்கு 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்புக்கு குவிக்கப்பட்டனர்.பின்னர் சாலை மறியலில் ஈடுபட்ட மக்களிடம் அதிகாரிகள், போலீசார் சமரச பேச்சுவார்த்தை நடத்தினர். இதில், புதிதாக கட்டப்பட்ட 20 கட்டடங்களை இடிக்க முடிவு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து, அப்பகுதி மக்கள் சாலை மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர். இதையடுத்து, அங்கு கோலடி ஏரியை ஆக்கிரமித்து புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை பொக்லைன் இயந்திரம் மூலம் இடித்து அகற்றும் பணியில் போலீஸ் பாதுகாப்புடன் வருவாய் துறை அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அங்கு பரபரப்பு நிலவி வருகிறது.

# அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மகிழ்ச்சி தருகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பெருமிதம்

**சென்னை,அக்.21**

அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மகிழ்ச்சி தருகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்மா.சுப்பிரமணியன் சென்னை, தலைமை செயலகத்தில் தமிழ்நாடு பார்வை மாற்றுத் திறனாளிகள் கூட்டமைப்பு சங்கங்களின் கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது சம்பந்தமாக செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு என்பது சற்று ஏறக்குறைய 10க்கும் மேற்பட்ட பார்வை குறைபாடுள்ள மாற்றுத்திறனாளிகள் சங்கங்களின் ஒருங்கமைப்பு ஆகும். அந்த வகையில் இந்த கூட்டமைப்பின் பிரதான கோரிக்கை பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசினர் தொழிற்பயிற்சி மையத்தில் புத்தகம் கட்டுநர்கான பயிற்சி 21 நபர்களுக்கு வருடாவருடம் தரப்பட்டு வந்ததை நிறுத்தக்கூடாது என்பதாகும். இன்றைக்கு நூலக துறையை பொருத்தவரை, நவீன காலத்திற்கேற்ப மின் நூலகங்கலாகவும், நூல்கள் மின் மயமாக்கும் பணியும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலும், அரசு அச்சகத்தில் நவீன ரக இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதால், பல்வேறு அதிநவீன இயந்திரங்கள் பயன்பாட்டில் இருக்கின்ற காரணத்தினாலும் இந்த நூல் கட்டுநர் பயிற்சியை முடித்த பார்வையற்ற நபர்கள் இந்த நவீன இயந்திரங்களை இயக்க இயலாது என சம்பந்தப்பட்ட துறையினர் தெரிவித்ததாலும், இந்த பயிற்சிக்கான தேவை வழக்கொழிந்துவிட்டதாக கருதப்பட்டு, இதற்கு மாற்றாக பார்வையற்றோர்க்கு உகந்ததாக உள்ள பயிற்சியை வழங்க சம்பந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முடிவெடுத்து, இப்பயிற்சியினை நிறுத்த அரசாணை பிறப்பித்திருந்தது. இதற்கு தமிழ்நாடு பார்வை மாற்றுத்திறனாளிகளின் கூட்டமைப்பு தங்களின் எதிர்ப்பை பதிவு செய்திருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு குறைவான அளவுக்கு ஒரு 21 பேர் மட்டுமே பயிற்சி பெறுகிறார்கள் என்றாலும், அது எங்களுக்கென்று இருக்கின்ற ஒரு பிரத்யேகமான பயிற்சி, அதை நிறுத்திடகூடாது என்கிற வகையில் தங்களுடைய கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்.கோரிக்கை வைத்தது மட்டுமல்லாது இது சம்மந்தமாக நீதிமன்றத்தையும் அணுகியிருக்கிறார்கள். இந்த நிலையில் வெளியிடப்பட்டிருந்த அரசாணையில் ஒரு நான்கு ஐந்து இடங்களில் அதற்கான காரணங்கள் சொல்லப்படுகிறபோது அது பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் மனதை புண்படுத்துவதாக இருப்பதாக சம்மந்தப்பட்ட நம்முடைய கூட்டமைப்பு தெரிவித்திருக்கிறது. இது சம்மந்தமான செய்தி இன்று காலை அறிந்தவுடன், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு இவ்வரசு பாதுகாப்பு அரணாக உள்ளது என்பதாலும் சமூக நலத்துறையின் கீழ் இயங்கிவந்த மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன்வசம் வைத்துக்கொண்டுள்ளதாலும் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு வகையில் உதவ வேண்டும் என்ற நேச மனப்பான்மையோடு இருப்பதாலும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சராகிய என்னை இந்த கூட்டமைப்புடன் பேச பணித்தார்.அதன்படி இக்கூட்டமைப்பினருடன் இன்று பேச்சுவார்த்தை நடத்தினேன். அப்போது ஒன்றிய அரசால் மாற்றுத்திறனாளிகளுக்காக ரூ.1225 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலையில், வேறு எங்கும் எப்போதும் இல்லாத அளவிற்கு 2024-25ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு அரசால் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1370 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருந்ததை சங்க உறுப்பினர்களே பாராட்டினார்கள். தமிழ்நாட்டைப்போல வேறு எந்த மாநிலத்திலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தோழமையோடு, நேச உணர்வோடு எந்த மாநிலமும் இல்லை என்பதை அவர்களுமே ஒப்புக்கொண்டார்கள். அந்த வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகளின் மனது புண்படக்கூடாது என்பதை கருத்தில்கொண்டு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் உயர் அலுவலர்களுடனும், சம்மந்தப்பட்ட மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பினருடனும் இணைந்து பேசினோம். சம்மந்தப்பட்ட கூட்டமைப்பினர், முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளுக்கு எத்தகைய சேவையினை வழங்கி வருகிறார்கள் என்பதை பட்டியலிட்டு சொன்னார்கள். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு விருதுகள் வழங்கப்படும்போது ஒரிஜினல் தங்கத்தில்தான் 10 கிராம் அளவில் தங்க பதக்கங்களை தமிழ்நாட்டில் தருகிறார்கள்,ஒன்றிய அரசின் விருதுகள் கோல்டு பிளேட்டட் ஆகதான் தரப்படுகிறது அது ஓரிரு மாதங்களில் கருத்துவிடுகிறது என்கின்ற செய்தியினையும் சொன்னார்கள். மாற்றுத்திறனாளிகளின் நலனை ஒரு குறிக்கோளாக வைத்திருக்கும் இவ்வரசு பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளின் மனதை புண்படுத்தும் சில அம்சங்கள் உள்ளடக்கிய இவ்வரசாணையை திரும்ப பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுத்ததை தொடர்ந்து இந்த அரசாணை என்பது திரும்ப பெற்றுக்கொள்ளப்படுகிறது என தெரிவித்தோம். அதனை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக இந்த அரசுக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் இதுதொடர்பாக தொடரப்பட்ட பொதுநல மனுவினை திரும்ப பெறுவதாக தேசிய பார்வையற்றோருக்கான கூட்டமைப்பின் தலைவர் திரு.மனோகரன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.அதோடு அவர்கள் இன்னொரு கோரிக்கையினையும் வைத்தார்கள். பேருந்துகளில் எங்களுக்கு இலவச பயணம் என்பது இருக்கின்றது, அப்படி பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளும்போது நடத்துனர்கள் ஆன்லைனில் பதிவு செய்திருக்கிறீர்களா? என்று கேட்கிறார்கள், மகளிர் இலவசமாக செல்லும்போது எந்த கேள்வியும் கேட்பதில்லை, எங்களிடம் மட்டும் இந்த கேள்வி கேட்கிறார்கள் என்கின்ற வகையில் கோரிக்கையினை சொன்னார்கள், நானும் உடனடியாக சம்மந்தப்பட்ட துறை அமைச்சரிடம் கேட்டபோது அவர்களும் இதற்கு ஒரு சுமூக தீர்வு காணப்படும் என தெரிவித்தார்கள். அதோடுமட்டுமல்லாமல் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் மகிழ்ச்சி தருகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மிக விரைவில் இந்த சங்கத்தினர் முதலமைச்சர் நேரில் சந்தித்து நன்றியும் சொல்லவிருக்கிறார்கள். இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர்சிஜி தாமஸ் வைத்யன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்எம்.லக்ஷ்மி, கலந்துகொண்டனர்.



# சென்னை மாநகராட்சி புதிய அறிவிப்பு: 30-ந்தேதிக்குள் சொத்துவரி செலுத்தினால் ஊக்கத்தொகை

**சென்னை அக் 21-**

சென்னை மாநகராட்சியில் சொத்து வரி செலுத்துபவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

சொத்து வரி குறிப்பிட்ட காலகெடுவுக்குள் சொத்து வரி செலுத்துவதில் பாக்கி வைக்காமல் இருந்தால் அவர்களுக்கு 5 சதவீத ஊக்கத் தொகை சலுகை கிடைக்கும்.5.13 லட்சம் சொத்து வரி செலுத்துபவர்களுக்கு இந்த மாதம் 30-ந்தேதிக்குள் வரியை செலுத்தி சலுகையை பெறும்படி மாநகராட்சி நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

8 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஆண்டுகளில் நிலுவைத் தொகையை செலுத்தாததால் 5 சதவீத ஊக்கத் தொகை சலுகை பெறும் தகுதியை இழந்துள்ளார்கள்.

கடந்த ஆண்டு 10 ஆண்டுகளுக்கும் மேலாக வரி பாக்கி வைத்திருந்த 25 பேரின் பெயர் பட்டியலை வெளியிட்டு வரி பாக்கியை வசூலிப்பதற்கான நடவடிக்கையை மாநகராட்சி மேற்கொண்டது.இதையடுத்து அவர்கள் வரியை கட்டினார்கள். சொத்து வரி கட்டாததற்காக இதுவரை சொத்துக்கள் எதையும் மாநகராட்சி பறிமுதல் செய்யவில்லை.

கடந்த 1-ந்தேதிக்கு முன்பே சுமார் 40 ஆயிரம் பேர் முன் கூட்டியே ஆன்லைனில் 6 சதவீத வரி உயர்வுக்கு பிறகு கடந்த 1-ந்தேதியில் இருந்து 19-ந்தேதி வரை 2.28 லட்சம் பேர் வரி செலுத்தி இருக்கிறார்கள். இதன் மூலம் ரூ.175 கோடிக்கு மேல் வரி வசூலாகி இருக்கிறது.

முன் கூட்டியே வரி செலுத்தியவர்களும் தங்களுக்கு ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்கள். அடுத்த மார்ச் 31-ந்தேதிக்குள் ரூ.1,800 கோடி சொத்து வரி வசூலிக்க மாநகராட்சி திட்டமிட்டு உள்ளது

# சென்னை பாண்டிபஜார் பகுதியில் வாலிபர் மீது கொலை தாக்குதல்: ஒருவர் தாக்கியவர் கைது

**சென்னை அக் 21-**

சென்னை, தி.நகர், இராமகிருஷ்ணபுரம், பாரதி நகர் ஹவுசிங் போர்டில் வசித்து வருபவர் உதயா, என்பவர் வசித்து வருகிறார். இவர் 17ந் தேதி அன்று இரவு 9.30 மணியளவில் அவரது நண்பர் மதி என்பவருடன் சேர்ந்து வடக்கு உஸ்மான் ரோடு, கோடம்பாக்கம் ஹைரோடு சந்திப்பில் மது அருந்தியுள்ளார். மதி குடிபோதையில் மீண்டும் மது வாங்குவதற்காக உதயாவிடம் பணம் கேட்டுள்ளார். உதயா பணம் இல்லை என கூறியபேது, ஏற்பட்ட வாய்த கராறு முற்றியதில் ஆத்திரமடைந்த மதி மதுபாட்டிலை உடைத்து உதயாவை குத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார். இரத்த காயமடைந்த உதயா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இது குறித்து உதயாவின் பாட்டி அஞ்சலை, சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் கொலை முயற்சி உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வந்தனர்.சௌந்திரபாண்டியனார் அங்காடி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி கொலை முயற்சி வழக்கில் சம்பந்தப்பட்ட மதி, என்பவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட மேற்கண்ட எதிரி மதி விசாரணைக்குப் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.



தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் வேணு கோபால்திருவொற்றியூர்மண்டல பகுதிபொறியாளராக பொறுப்பேற்றுள்ளார். அவர் திருவொற்றியூர் மண்டலகுழு தலைவர் தி.மு.தனியரசைமரியாதை நிமித்தமாக சந்தித்து சால்வைஅணிவித்தார்.

# யானைகவுனி பகுதியில் கஞ்சா கடத்தல் வழக்கில் 3 குற்றவாளிகளுக்கு 12 ஆண்டுகள் தண்டனை

**சென்னை அக் 21-**

யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் 30.04.2022 அன்று, வால்டாக்ஸ் ரோடு, திருப்பள்ளி தெரு சந்திப்பில் கண்காணித்து, அங்கு காரில் கஞ்சா கடத்தி வந்த 1. மோகன் குமார், 2.ஸ்டேன்லி, 3.பெருரி சீனு, ஆகிய 3 பேரை பிடித்து விசாரித்து பிறகு அவர்களை கைது செய்து அவர்களிடமிருந்து 60 கிலோ கஞ்சா மற்றும் 1 காரை பறிமுதல் செய்தனர். யானைகவுனி காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, கைது செய்யப்பட்ட 3 நபர்களையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு தொடர்பாக, சென்னை, உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதன்மை போதைப்பொருள் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில், வழக்கு விசாரணை முடிவடைந்து இவ்வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டது.மேற்படி வழக்கில் எதிரிகள் 1) மோகன்குமார், 2) ஸ்டேன்லி மற்றும் 3) பெருரி சீனு ஆகியோர் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டதால் 1.பிரிவு 258 (2) பி.என்.எஸ்எஸ் இன் கீழ் ஏ1, ஏ2 மற்றும் ஏ3 குற்றவாளிகளுக்கு தலா 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.1,20,000/- அபராதமும், 2.பிரிவு 8 இன் கீழ் ஏ1, ஏ2 மற்றும் ஏ3 எதிரிகளுக்கு தலா 5 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் தலா ரூ.50,000/- அபராதமும், 3.பிரிவு வின் கீழ் ஏ1 எதிரிக்கு 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1,20,000/- அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பு வழங்கியுள்ளார்கள். அதன் பேரில் எதிரிகள் சிறையில் அடைக்கப்பட்டனர்.மேற்படி வழக்கில் சிறப்பாக புலன் விசாரணை செய்து, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை பெற்று தந்த யானைகவுனி காவல் நிலைய ஆய்வாளர்கள் மற்றும் நீதிமன்ற அலுவல் பணி புரியும் காவல் குழுவினரை காவல் உயரதிகாரிகள் வெகுவாகப் பாராட்டினர்.



மதுரவாயலில் ஏ.பி.ஜெ.அப்துல்கலாமின் 93 வது பிறந்த நாளையொட்டி சாய் தெரேசா பவுண்டேஷன் நிறுவனத் தலைவர் மதுரவாயல் ப.ஞானவேலு ஏற்பாட்டில் 148 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வி.வி.கிரிதரன் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் மரக்கன்று, அன்னதானம் வழங்கினார்.உடன் ஷகின்ஷா லோகநாதன் மூவேந்தர் விக்டர்வேல் ஏசுகுமார் சிவக்குமார் ராஜி லோகேஸ்வரன் எத்திராஜ் ராகுல் சரண் தமிழரசன் கெவின் உள்ளனர்.

# தொழிலதிபரிடம் வழிப்பறியில் ஈடுபட்ட திருநங்கைகள் கைது

**சென்னை அக் 21-**

சென்னை பள்ளிக்கரணையைச் சேர்ந்த தொழிலதிபர் நந்தகுமாரிடம் ரூ.50,000, 5 சவரன் செயின் வழிப்பறி செய்த 4 திருநங்கைகளை போலீசார் கைது செய்துள்ளனர். வழிப்பறியில் ஈடுபட்ட சுபஸ்ரீ, ரபியா, மயூரி, தேவயானி ஆகியோரை கைது செய்து போலீஸ் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பையில் அதிக பணம் இருந்ததை பார்த்த திருநங்கை மேலும் 3 பேரை அழைத்து பணம், நகை பறித்து தப்பினர்.

# பழ வியபாரி மீது தாக்குதல்: இருவர் கைது

**சென்னை அக் 21-**

சென்னை, ஐஸ் அவுஸ், லாயிட்ஸ் காலனி, முத்தையா தெருவில் வசித்து வரும் தாமோதரன், என்பவர் தள்ளு வண்டியில் பழ வியாபாரம் செய்து வருகிறார்.

**கைது**

தாமோதரன் கடந்த 16. ந் தேதி அன்று இரவு, இராயப்பேட்டை, ஒயிட்ஸ் ரோடு மற்றும் ஸ்மித் ரோடு சந்திப்பில் தனது தள்ளுவண்டியில் பழங்கள் வியாபாரம் செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த தாமோதரனின் நண்பர்களான ஆட்டோ ஓட்டுநர்கள் லெனின் மற்றும் மணிகண்டன் ஆகியோர் தாமோதரனிடம் அவசரமாக பணம் தேவை ரூ.100 கொடு. நான் உனக்கு ஜிபே செய்கிறேன் எனக் கூறி 100 ரூபாய் வாங்கிச் சென்றனர்.

ஆனால் இருவரும் தாமோதரனுக்கு ரூ.100 ஜிபே செய்யாமல், சிறிது நேரம் கழித்து திரும்ப வந்து தாமோதரனிடம் 500 ரூபாய் கொடு உடனே ஜிபே செய்கிறேன் எனக் கேட்டுள்ளனர். ஆனால் தாமோதரன் தன்னிடம் பணம் இல்லை எனக்கூறிய போது, இருவரும் ஆத்திரமடைந்து தாமோதரனிடம் தகராறு செய்து, பழக்கடையில் இருந்த கத்தியை எடுத்து தாமோதரனின் தலையில் தாக்கிவிட்டு இருவரும் தப்பிச் சென்றனர். இதில் இரத்தக்காயமடைந்த தாமோதரன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் மேற்படி சம்பவம் குறித்து அண்ணா சாலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், அண்ணா சாலை போலீசாரால் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

அண்ணா சாலை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் 1.லெனின், 2.மணிகண்டன், ஆகிய 2 பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து குற்றச் செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.கைது செய்யப்பட்ட அடைக்கப்பட்டனர்.

# வேளச்சேரி - பெருங்குடி ரயில் நிலைய சாலை: மாநகராட்சி பராமரிக்கிறது

**சென்னை அக் 21-**

வேளச்சேரி மற்றும் பெருங்குடி பறக்கும் ரயில் நிலையங்களை இணைக்கும் சாலையை பராமரிக்கும் பணிகளை மேற்கொள்ள சென்னை மாநகராட்சிக்கு தெற்கு ரயில்வே ஒப்புதல் வழங்கியுள்ளது. சுமார் 2 கி.மீ. நீளமுள்ள இந்த சாலையில் நடைபாதை, இருக்கைகள், நீர்த்தேக்க குளம் உள்ளிட்டவை அமைக்கத் திட்டம் என சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் தகவல் தெரிவித்துள்ளார்.



தஞ்சாவூர் மாவட்டம் பாரத் நிர்வாகவியல் கல்லூரி வளாகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பயிறசி துறை, மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழி காட்டும் மையம், தமிழ்நாடு ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய தனியார் துறை வேலை வாய்ப்பு முகாமில் கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம் கலந்து கொண்டு பணி ஆணையை வழங்கினார். உடன் மேயர் சண்.ராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் உஷா, துணை மேயர் அஞ்சுகம் உள்ளனர்.

# விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்ப முயன்ற நபருக்கு சரமாரி அடி: எழும்பூரில் பரபரப்பு

**சென்னை அக் 21-**

சென்னை எழும்பூர் அருகே சொகுசு கார் ஒன்று தறிகெட்டு ஓடி விபத்தை ஏற்படுத்தியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை பூந்தமல்லி நெடுஞ்சாலையில், காவல் ஆணையர் அலுவலகம் முன்பு விபத்து ஏற்படுத்தியுள்ளது. இதில், பலத்த காயங்களுடன் குழந்தை உள்பட 6 பேர் அரசு ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில், ஆட்டோவின் முன்பகுதி நசுங்கியுள்ளது. மேலும், கார், இரண்டு பைக்குகளும் பலத்த சேதமடைந்துள்ளன.விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியோட முயன்றவர்களை பொதுமக்களே பிடித்து சரமாரியாக தாக்கி போலீசில் ஒப்படைத்தனர். காரை ஓட்டி வந்தவர் மற்றும் அவரது மகன் என இருவரும் கைதாகி உள்ளனர்.

மேலும், காரின் முகப்பில் உகாண்டாவுக்கான தூதரக அலுவலகம் என குறிப்பிடப்பட்ட போஸ்டர் உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# எம்.கே.பி நகர் பகுதியில் மூவரை தாக்கிய வாலிபர் கைது

**சென்னை அக் 21-**

சென்னை, வியாசர்பாடி, பி.வி. காலனியை சேர்ந்தவர் சத்யா, என்பவர் வசித்து வருகிறார். சத்யாவின் கணவர் ஆறுமுகம் 17 ந் தேதி அன்று இரவு வீட்டின் கதவை பூட்ட சென்ற போது, எதிர் வீட்டில் வசிக்கும் ஆசிப் என்பவர் குடிபோதையில் ஆறுமுகத்திடம் தகராறு செய்து தாக்கி உள்ளார்.

**தாக்குதல்**

இதனை பார்த்த சத்யா மற்றும் அவரது மகன் சுரேஷ் இருவரும் சென்று ஆசிப்பிடம் ஏன் தகராறு செய்கிறாய் எனக்கேட்டபோது, ஆத்திரமடைந்த ஆசிப் அவதூறாக பேசி சத்யா மற்றும் சுரேஷையும் தாக்கிவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளார்.

**வாலிபர் கைது**

காயமடைந்த சத்யா மற்றும் அவரது மகன் சுரேஷ் இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இது குறித்து சத்யா எம்.கே.பி நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து, விசாரணை செய்து வந்தனர்.

எம்.கே.பி நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட ஆசிப், என்பவரை கைது செய்தனர்.

வாகனங்கள் ஓட்டும் போது செல்போன் பேசாதே... பேசுவது எமனாக இருக்கலாம்

